<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 22/2015**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>வாக்குமூலம் – வா.சா.1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஈஸ்வரமூர்த்தி | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 210.01.2026 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ஆண்டு ஜனவரி 21 ம் நாள் சாட்சியம்.

---

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கானது எனது தாத்தா சென்னிமலைக்கவுண்டரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் தற்போது ஈரோட்டில் வசித்து வருகிறேன். இந்த வழக்கானது தடத்திற்க்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் தடத்தினை மாமூலாக அனுபவித்து வருவதன் அடிப்படையில் உரிமை கோரி வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் தடம் குறித்து எங்கள் ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. க.ச.210 மற்றும் க.ச.211 ஆகிய காலைகளில் பொதுவில் சரிபாதியை எனது தாத்தா சென்னிமலைக்கவுண்டர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். க.ச.211 க்கு கிழபுறமாக க.ச.210 அமைந்துள்ளது என்றால் சரிதான். க.ச.210 ற்கு கிழபுறமாக அரசுக்கு பாத்தியப்பட்ட 25 முதல் 30 அடி அகலமுள்ள இட்டேரி பாதை உள்ளது என்றால் சரிதான். க.ச.210 மற்றும் க.ச.211–ல் எனது தாத்தா கிரையம் பெற்ற பாதி சொத்தைத் தவிர மீதமுள்ள சரிபாதி சொத்தானது சென்னித்துரைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. எனது தாத்தாவும், சென்னித்துரையும் மேற்படி க.ச.210 மற்றும் க.ச.211 ஆகிய சொத்துக்களை வாய்மொழியாக பிரித்த போது வடபுறம் எனது தாத்தாவிற்கும், தென்புறம் சென்னித்துரைக்கும் ஒதுக்கிக் கொள்ளப்பட்டது என்றால் சரிதான். அரசுக்கு பாத்தியப்பட்ட இட்டேரியை ஒட்டி அமைந்த எனது தாத்தாவின் பாகமான க.ச.210 ல் கட்டுப்பட்ட சொத்தினை 3ம் நபருக்கு விற்பனை செய்து விட்டார். இந்த வழக்கின் விவரங்கள் எனது தாத்தா வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் இருந்தே எனக்குத் தெரியும்.

3. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதி கூறியுள்ளது போல் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தடம் எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியும். இந்த வழக்கில் 2024–ஆம் ஆண்டு எங்கள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு எந்த வழக்கறிஞரிடம் உள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாததால் நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது.

4. நான் சொல்வது போல் தடம் எதுவும் இல்லாததால் தான் நீதிமன்ற ஆணையரை காலதாமதமாக அழைத்துச் சென்றேன் என்றால் சரியல்ல. க.ச.194–ல் கட்டுப்பட்ட பூமியும் க.ச.210, க.ச.211 ல் கட்டுப்பட்ட பூமியும் ஆதியில் வெவ்வேறு குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பூமிகள் ஒரே குடும்பத்தினரிடம் இருந்து பிரிந்தது என்பதற்கு நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எங்கள் பூமிக்கு தென்புறம் உள்ள சென்னித்துரை வகைறாவிற்கு தாவா தடத்தில் வந்து எங்கள் பூமி வழியாக தெற்கு நோக்கி தடம் உள்ளது. அந்த தடத்தினை நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளார். அந்த தடமானது சென்னித்துரை வகையறா மற்றும் 10 நபர்களுக்கு பாத்தியப்பட்டது. அந்த தடமானது சென்னித்துரை மற்றும் 10 நபர்களுக்கு பாத்தியம் என்ற விவரத்தினை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்லுகின்ற எனது பூமியிலிருந்து செல்கின்ற தடமானது 6 முதல் 8 அடி வரை அகலம் கொண்டது.

5. நாச்சாத்தாள் பூமியில் கிழக்கோட்டில் தெற்கு நோக்கி ஒரு தடம் உள்ளது. தற்போது அந்த தடம் நிலையில் இல்லை. க.ச.195 ல் உள்ள கிணற்றிலிருந்து கிழக்கு நோக்கி சென்னித்துரை பூமி வழியாக எங்கள் பூமி வரை ஒரு வாய்க்கால் உள்ளது. க.ச.194 ல் உள்ள கிணற்றிலிருந்து தெற்கு நோக்கி மேலே சொன்ன கிழமேல் வாய்க்கால் வரை ஒரு வாய்க்கால் இருந்தது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரிடம் அந்த வாய்க்கால்களை காண்பித்தேனா என்று எனக்கு ஞாபகமில்லை.

6. எங்கள் பூமிக்கு கிழபுறத்தில் இருந்த இட்டேரியை தடமான பயன்படுத்தினோம் என்றும், தடத்தினை ஒட்டிய பகுதியினை கிரையம் கொடுத்து விட்டு தற்போது பிரதிவாதிகளிடம் தடம் பெறுவதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா தடத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.